**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**EA.No. 2/2021 in EP. No.3/2021**
**in OS. No.154/2014**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.11.2025 | | |
| பெயர்: | ஆறுமுகம் (PW– 2 Cross ) | தகப்பனார் பெயர்: | சுப்பிரமணியன் |
| கிராமம்: | குச்சிபாளையம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2025 |

**4, 5, 6 –ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை : 17.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.07)**

மனுதாரர் சரிதா எனக்கு உறவினர். எதற்காக வழக்கு நடைபெறுகிறது என்று தெரியுமா என்றால் நான் இடம் வாங்கி கொடுத்தேன். அந்த இடத்திற்காக வழக்கு நடைபெறுகிறது. எத்தனை நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் வாங்கி கொடுத்த இடத்தின் விஸ்தீரணம் என்பது 40–1/2 செண்ட் (121 குழி) ஆகும். அந்த 121 குழி சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு நடைபெற்று வந்த விவரம் எனக்கு தெரியும்.

2. மேற்படி 121 குழி தற்போது மனுதாரர் சரிதாவின் அனுபவத்தில் இருந்து வருகிறது. கடந்த 19.11.2020–ல் மக்கள் நீதிமன்றத்தில் அவரவர்களுக்கு உரிய பாகத்தை பிரித்து எடுத்துக்கொண்டார்கள் என்றாலும் , மேற்படி 121 குழி சரிதாவின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று நான் சாட்சியம் அளிப்பது தவறு என்றாலும் சரியல்ல. செல்வி , மனோன்மணி, சூரியகலா ஆகியோர் நீதிமன்றம் மூலமாக வசம் எடுத்து அவரவர்கள்

அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3. உண்மைகளை மறைத்து மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் மனுதாரரின் உறவினர் என்ற காரணத்தினாலும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.15)**